**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**
முன்னிலை : திருமதி.G.ஆனந்தி, எம்.ஏ., எம்.எல்.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி.

2022ம் வருடம் செப்டம்பர் திங்கள் 23ம் நாள் வெள்ளிக்கிழமை
**அ.வ.எண்.263/2021 இல் இ.ம.எண்.02/2021**

C.கற்பகம் ... மனுதாரர் /வாதி

/ எதிர் /

P.சக்திவேல் ... எதிர்மனுதாரர் / பிரதிவாதி

இம்மனுவானது கடந்த 24.08.2022ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு மனுதாரர் / வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.Su.செந்தில்குமார் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் / பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.B.செல்வகுமார் அவர்கள் முன்னிலையாகியும், மனுதாரர் / வாதி மற்றும் எதிர்மனுதாரர் / பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர்களின் வாதுரைகளைக் கேட்டும், இதுநாள் வரையில் எனது கவனமான பரிசீலனையில் இருந்து வரும் வழக்காவணங்களை பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்...

## ஆணையுரை

தாவா சொத்தினை மனுதாரர் / வாதி தனது சுவாதீனத்தில் வைத்து அனுபவித்து வருவதை எதிர்மனுதாரர் / பிரதிவாதியோ, அவரது உறவினர்களோ, உள்ளீட்டாளர்களோ எவ்வகையிலும் இடைஞ்சல் செய்யக் கூடாது என்று தற்காலிக உறுத்துக்கட்டளை உத்தரவும், அசல் வழக்கு முடியும் வரை இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவும் பிறப்பிக்கக்கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதி 1 மற்றும் 2–ன் கீழ் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **<u>மனுதாரர் / வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம் :</u>**

மனுதாரர் அசல் வழக்கின் வாதி. அசல் வழக்கானது மனுதாரர் / வாதியால், எதிர்மனுதாரர் / பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் / பிரதிவாதி, மனுதாரர் / வாதியின் கணவரின் சகோதரர். இவர்களின் தகப்பனார் பழனிச்சாமி. மனுச்சொத்து ஆதியில் நாச்சம்மாளுக்கு UDR பட்டா எண்.517 ன் பாத்தியப்பட்டுள்ள நிலையில் 05.07.2020 ம் தேதியில் நாச்சம்மாள் காலமாகிவிட்டார். மேற்படி நாச்சம்மாள் 10.10.2018 ம் தேதியில் நாச்சம்மாளின் கணவர் ரங்கசாமி கவுண்டரின் அண்ணன் திரு.பழனிச்சாமியின் மகன் சிவராஜ் என்பவருக்கு சொத்துக்களைப் பொறுத்து பதிவு செய்யப்பட்ட உயில்சாசனத்தை எழுதிக்கொடுத்துள்ளார். நாச்சம்மாள் இறந்த பிறகு உயில்சாசனமானது அமலுக்கு வந்து மனுச்சொத்து சிவராஜ் என்பவருக்கு பாத்தியப்பட்டு வருவாய்துறை ஆவணங்களில் அவரது பெயருக்கு பெயர் மாற்றம் செய்து அவரால் அனுபவம் செய்யப்பட்டு வந்தது. மேற்படி சிவராஜ் 07.09.2020 ம் தேதியில் அவரது மனைவியான மனுதாரர் / வாதியின் பெயரில் செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதிக்கொடுத்து அன்றைய தினமே தாவா சொத்தின் சுவாதீனத்தை மனுதாரர் / வாதியின் வசம் ஒப்படைத்தால் மனுதாரர் / வாதியின் சுவாதீன அனுபவத்தில் இருந்து வருகிறது. பட்டா மாறுதலுக்காக விண்ணப்பம் கொடுக்கப்பட்டு பரிசீலனையில் உள்ளது. மனுதாரர் / வாதியின் கணவரின் சகோதரரான எதிர்மனுதாரர் / பிரதிவாதிக்கும், மனுதாரர் / வாதியின் கணவருக்கும் ஏற்பட்ட மனஸ்தாபத்தின் காரணமாக மனுச்சொத்தின் மீதான மனுதாரர் / வாதியின் அனுபவத்தினை இடையூறு செய்து வருகிறார். எதிர்மனுதாரர் / பிரதிவாதிக்கு மனுச்சொத்தில் எவ்வித உரிமையும், பாத்தியமும் இல்லை. எனவே, தாவா சொத்தினைப் பொறுத்து நிரந்தர உறுத்துக் கட்டளை

பரிகாரம் கோரி இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் அசல் வழக்கானது முடிவிற்கு வரும் வரையில் தாவா சொத்தின் மீதான மனுதாரர் / வாதியின் அனுபவத்தினை எதிர்மனுதாரர் / பிரதிவாதி எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என்று இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

3) <u>எதிர்மனுதாரர் / பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்</u> :

தாவா சொத்து நாச்சம்மாள் என்பவருக்கு UDR பட்டா எண்.517 ன்படி பாத்தியப்பட்டு அவரது அனுபவத்தில் இருந்ததாக கூறியுள்ளது மறுக்கப்படுகிறது. தாவா சொத்து 07.06.1978 ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தின்படி எதிர்மனுதாரர் / பிரதிவாதியின் தந்தைவழி பாட்டனாரான ராமசாமி கவுண்டருக்கு பாத்தியப்பட்டு அவரது சுவாதீன அனுபவத்தில் இருந்து வந்தது. ராமசாமி கவுண்டர் 1993 ம் வருடத்தில் சொத்துக்களைப் பொறுத்து எவ்வித ஏற்பாடும் செய்து வைக்காமல் எதிர்மனுதாரர் / பிரதிவாதியின் தகப்பனாரான பழனிச்சாமி, ரங்கசாமி ஆகிய இரு மகன்களையும், தெய்வாத்தாள், ரங்கத்தாள் மற்றும் மயிலாத்தாள் ஆகிய மூன்று பெண் மக்களையும் வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்து விட்டார். மேற்படி ராமசாமி கவுண்டரின் வாரிசுகள் அனைவரும் தாவா சொத்தினை அனுபவம் செய்து வந்தனர். தாவா சொத்து 1997 ம் வருடம் முதல் நாச்சம்மாளின் அனுபவத்தில் இருந்ததாகவும், 10.10.2018 ம் தேதியில் நாச்சம்மாள் என்பவர் சிவாராஜீக்கு பதிவு செய்யப்பட்ட உயில்சாசனத்தை எழுதி வைத்து 05.07.2020 ம் தேதியில் இறந்து விட்டதாக கூறியுள்ளது கட்டுக்கதை. மேற்படி உயில்சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சிவராஜ் எதிர்மனுதாரர் / பிரதிவாதியின் சகோதரர். தாவா சொத்துக்களும், இதர விவசாய நிலங்களும் ராமசாமி கவுண்டரின் வாரிசுகளுக்கு பாத்தியப்பட்டது. மேற்படி நாச்சம்மாள், ராமசாமி கவுண்டரின் மருமகள். எனவே அவர் தாவா சொத்தினைப் பொறுத்து உயில்சாசனம் எழுத

உரிமை இல்லை. மேற்படி உயில்சாசனம் சட்டப்படி பொய்யானது. மேற்படி நாச்சம்மாள் 2017 ம் வருடத்திலிருந்து மனநிலை பாதிக்கப்பட்டிருந்தார். மனுதாரர் / வாதியின் கணவர் மோசடியாக உயில்சாசனத்தை ஏற்படுத்திக் கொண்டு அதன் அடிப்படையில் வருவாய் ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்துள்ளார். ரங்கசாமி கவுண்டரின் வாரிசுகளுக்கு தாவா சொத்துக்கள் பாத்தியப்பட்டுள்ள நிலையில் மனுதாரர் / வாதியின் கணவர் ராமசாமி கவுண்டரை மட்டுமல்லாமல் நீதிமன்றத்தையும் ஏமாற்ற முயற்சி செய்து வருகிறார். 07.09.2020 ம் தேதியில் சிவராஜ், மனுதாரர் / வாதிக்கு ஆதரவாக செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதிக் கொடுத்துள்ளார். நாச்சம்மாளின் இறப்பிற்கும், செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்பட்டதற்குமான இடைப்பட்ட காலகட்டத்தை கணக்கிட்டாலே உண்மை நிலை தெரிய வரும். எதிர்மனுதாரர் / பிரதிவாதியின் தகப்பனார் தான் தாவா சொத்துக்களில் விவசாயம் செய்து வருகிறார். எனவே, தாவா சொத்து மனுதாரர் / வாதிக்கு பாத்தியப்பட்டுள்ளதாக கூறியுள்ளது பொய்யானது. ராமசாமி கவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் அனைத்தும் பாகம் செய்யப்படாமல் அவரது வாரிசுகள் அனைவரும் அனுபவம் செய்து வரும் நிலையில் தாவா சொத்து மனுதாரர் / வாதியின் அனுபவத்தில் உள்ளதாக கூறியுள்ளது பொய்யானது. தாவா சொத்தின் அனுபவத்தில் மனுதாரர் / வாதி இல்லாத நிலையில் அவரது அனுபவத்தினை எதிர்மனுதாரர் / பிரதிவாதி இடையூறு செய்து வருவதாக கூறியுள்ளது பொய்யானது. தாவா சொத்தில் மனுதாரர் / வாதிக்கு எவ்வித உரிமையும் இல்லாததால் மனுதாரர் / வாதிக்கு ஆதரவாக முதல் தோன்றல் வழக்கும், சட்டசமன் நோக்கும் இல்லாத நிலையில் இம்மனுவினை தள்ளுபடி செய்யவேண்டுமென்று கூறப்பட்டுள்ளது.

4) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

5) இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

6) தாவா சொத்தினை மனுதாரர் / வாதி அவரது சுவாதீனத்தில் வைத்து அனுபவித்து வருவதை எதிர்மனுதாரர் / பிரதிவாதியோ, அவரது உறவினர்களோ, உள்ளீட்டாளர்களோ எவ்வகையிலும் இடைஞ்சல் செய்யக் கூடாது என்று தற்காலிக உறுத்துக்கட்டளை உத்தரவும், அசல் வழக்கு முடியும் வரை இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவும் பிறப்பிக்கக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் / வாதி, எதிர்மனுதாரர் / பிரதிவாதி தரப்பில், சாட்சிகள் முன்னிலைப்படுத்தப்படவில்லை. மனுதாரர் / வாதி தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் / பிரதிவாதி தரப்பில் எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. கற்றறிந்த இருதரப்பு வழக்கறிஞர்களின் வாதுரை கேட்கப்பட்டது.

7) இருதரப்பு வாதுரையிலிருந்தும், வழக்காவணங்களின் பரிசீலனையில் இருந்தும், அசல் வழக்கானது மனுதாரர் / வாதியால், எதிர்மனுதாரர் / பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் அசல் வழக்கானது முடிவிற்கு வரும் வரையில் எதிர்மனுதாரர் / பிரதிவாதி தாவா சொத்தின் மீதான மனுதாரர் / வாதியின் அனுபவத்தினை எதிர்மனுதாரர் / பிரதிவாதி எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என்றும் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8) மனுதாரர் / வாதி தரப்பில் தாவா சொத்து நாச்சம்மாள் என்பவருக்கு ம.சா.ஆ.4 UDR பட்டா எண்.517 ன் படி பாத்தியப்பட்டிருந்த நிலையில் அவரது கணவரான ரங்கசாமி கவுண்டரின் அண்ணன் பழனிச்சாமியின் மகனான மனுதாரர் / வாதியின் கணவரான சிவராஜ் என்பவருக்கு ஆதரவாக பதிவு செய்யப்பட்ட உயில்சாசனத்தை எழுதிக் கொடுத்துள்ள நிலையில் மேற்படி நாச்சம்மாள் 05.07.2020 ம் தேதியில் இறந்துவிட்டதாகவும், அதன் பின்னர்

ம.சா.ஆ.2 10.10.2018ம் தேதியிட்ட உயில்சாசனம் அமலுக்கு வந்ததின் அடிப்படையில் மேற்படி சிவராஜ் வருவாய் துறை ஆவணங்களில் அவரது பெயருக்கு பெயர் மாற்றம் செய்து ம.சா.ஆ.5 சிட்டா பெற்றுள்ளதாகவும், மேற்படி சிவராஜ், மனுதாரர் / வாதிக்கு ம.சா.ஆ.1 07.09.2020ம் தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதிக்கொடுத்ததின் அடிப்படையில் தாவா சொத்து மனுதாரர் / வாதிக்கு பாத்தியப்பட்டு அவரது அனுபவ சுவாதீனத்தில் இருந்து வருவதாகவும், தாவா சொத்தின் மீதான மனுதாரர் / வாதியின் அனுபவத்தினை எதிர்மனுதாரர் / பிரதிவாதி இடையூறு செய்து வருவதால் இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

9) எதிர்மனுதாரர் / பிரதிவாதி தரப்பில் தாவா சொத்துக்கள் நாச்சம்மாள் என்பவருக்கு பாத்தியப்படவில்லை என்றும், அது 07.06.1978ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தின்படி எதிர்மனுதாரர் / பிரதிவாதியின் தந்தைவழி பாட்டனாரான ராமசாமி கவுண்டருக்கு பாத்தியப்பட்டு அவரது சுவாதீன அனுபவத்தில் இருந்த வந்த நிலையில் மேற்படி ராமசாமி கவுண்டர் சொத்துக்களைப் பொறுத்து எவ்வித ஏற்பாடும் செய்து வைக்காமல் எதிர்மனுதாரர் / பிரதிவாதியின் தகப்பனாரான பழனிச்சாமி, ரங்கசாமி ஆகிய இரு மகன்களையும், தெய்வாத்தாள், ரங்கத்தாள் மற்றும் மயிலாத்தாள் ஆகிய மூன்று பெண் மக்களையும் வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்து விட்ட நிலையில் மேற்படி ராமசாமி கவுண்டரின் வாரிசுகள் அனைவரும் சேர்ந்து கூட்டாக தாவா சொத்தினை அனுபவம் செய்து வருவதாகவும், தாவா சொத்துக்கள் நாச்சம்மாள் என்பவருக்கு வாய்மொழி பாகத்தின் அடிப்படையில் பாத்தியப்பட்டதாக பொய்யாக குறிப்பிட்டுள்ளதாகவும், தாவா சொத்துக்கள் நாச்சம்மாளுக்கு பாத்தியப்படாத நிலையில் மனுதாரர் / வாதியின் கணவரான சிவராஜீக்கு உயில்சாசனத்தை எழுதிக் கொடுக்க நாச்சம்மாளுக்கு உரிமை இல்லை என்றும், உயில்சாசனத்தின் அடிப்படையில் சிவராஜ், மனுதாரர் / வாதிக்கு

செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதிக் கொடுக்க உரிமையில்லாத நிலையில், மனுதாரர் / வாதிக்கு தாவா சொத்தில் எவ்வித உரிமையும் இல்லை என்றும், மேற்படி நாச்சம்மாள் இறப்பதற்கு முன்பு மனநிலை பாதிக்கப்பட்டு இருந்ததால் உயில்சாசனம் மோசடியானது என்பதால் மனுதாரர் / வாதி கோரியுள்ள பரிகாரம் மனுதாரர் / வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று கூறப்பட்டுள்ளது.

10) மனுதாரர் / வாதி தரப்பில் தாவா சொத்து நாச்சம்மாளுக்கு ம.சா.ஆ.4 சிட்டாவின் படி பாத்தியப்பட்டிருந்த நிலையில் மேற்படி நாச்சம்மாள், மனுதாரர் / வாதியின் கணவரான சிவராஜ் என்பவருக்கு ம.சா.ஆ.2 10.10.2018 ம் தேதியிட்ட உயில்சாசனத்தை எழுதிக் கொடுத்துள்ளதாகவும், அதன் அடிப்படையில் சிவராஜ், மனுதாரர் / வாதிக்கு ம.சா.ஆ.1 07.09.2020 ம் தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதிக் கொடுத்துள்ளதாக கூறப்பட்டுள்ளது.

11) எதிர்மனுதாரர் / பிரதிவாதி தரப்பில் தாவா சொத்து நாச்சம்மாளின் மாமனாரான ராமசாமி கவுண்டருக்கு பாத்தியப்பட்டிருந்தாகவும், அவரது மருமகளான நாச்சம்மாளுக்கு அதில் தனிப்பட்ட உரிமை இல்லை என்றும் கூறப்பட்டுள்ளது.

12) மனுதாரர் / வாதி தரப்பில் தாவா சொத்து 07.06.1978 ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தின்படி நாச்சம்மாளின் மாமனாரான ராமசாமி கவுண்டருக்கு பாத்தியப்பட்டிருந்த நிலையில் குடும்பத்தில் ஏற்பட்ட வாய்மொழி பாகத்தின்போது தாவா சொத்து நாச்சம்மாளின் கணவரான ரங்கசாமி கவுண்டருக்கு ஒதுக்கப்பட்டு, ரங்கசாமி கவுண்டரின் இறப்பிற்கு பின்னிட்டு அவரது மனைவி என்ற முறையில் நாச்சம்மாளுக்கு பாத்தியப்பட்டு நாச்சம்மாள் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளதால் நாச்சம்மாள் தாவா சொத்துக்களைப் பொறுத்து மனுதாரர் / வாதியின் கணவரான சிவராஜ் என்பவருக்கு ம.சா.ஆ.2 உயில்சாசனத்தை எழுதி வைத்துள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. தாவா சொத்துக்கள் நாச்சம்மாளின் கணவர் ரங்கசாமிக்கு வாய்மொழி பாகத்தில் ஒதுக்கப்படவில்லை என்றும், அது

ராமசாமி கவுண்டரின் வாரிசுகளால் பொதுவாக அனுபவம் செய்யப்பட்டு வருவதாகவும் எதிர்மனுதாரர் / பிரதிவாதி தரப்பில் ஆட்சேபணை செய்யப்பட்டுள்ளது.

13) மனுதாரர் / வாதி கூறியுள்ளவாறு ராமசாமி கவுண்டரின் வாரிசுகளுக்கிடையே சொத்துக்களைப் பொறுத்து வாய்மொழி பாகம் ஏற்பட்டுள்ளதா இல்லையா என்பது குறித்தும், அந்த வாய்மொழி பாகத்தில் தாவா சொத்து ரங்கசாமி கவுண்டருக்கு ஒதுக்கப்பட்டுள்ளதா, இல்லையா என்பது குறித்தும் வழக்கின் விசாரணையின் போது முன்னிறுத்தப்படும் சாட்சியங்கள் மூலமாக தான் தெளிவுப்படுத்திக் கொள்ள இயலும்.

14) எதிர்மனுதாரர் / பிரதிவாதி தரப்பில் மேற்படி நாச்சம்மாள் மனநிலை பாதிக்கப்பட்டிருந்ததாக கூறி அவரது டிஸ்சார்ஜ் சம்மரி எ.ம.சா.ஆ.5 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் / வாதி தரப்பில் எ.ம.சா.ஆ.5 டிஸ்சார்ஜ் சம்மரி தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் மட்டுமே நாச்சம்மாள் மனநிலை பாதிக்கப்பட்டிருந்தார் என்று கருத இயலாது என்றும், மேற்படி டிஸ்சார்ஜ் சம்மரியை வழங்கிய மருத்துவரை விசாரணை செய்த பின்னரே மேற்படி நபர் நல்லமனநிலையில் இருந்தாரா, இல்லையா என்று தெளிவுபடுத்திக்கொள்ள இயலும் என்று கூறப்பட்டுள்ளது.

15) ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளவாறு நாச்சம்மாள் என்பவரின் பெயரில் உள்ள டிஸ்சார்ஜ் சம்மரி எ.ம.சா.ஆ.5 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி டிஸ்சார்ஜ் சம்மரியை அதனை வழங்கிய மருத்துவரை விசாரித்து அவர் மூலமாக குறியீடு செய்யாத காரணத்தால் வழக்கின் இந்நிலையில் நாச்சம்மாள் மனநிலை பாதிக்கப்பட்டிருந்தார் என்று முடிவிற்கு வர இயலாது என்ற நிலையில் மனுதாரர் / வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ம.சா.ஆ.5 பட்டாவின் அடிப்படையில் தாவா சொத்து நாச்சம்மாளுக்கு பாத்தியப்பட்டிருந்த காரணத்தால் தான் அதனைப் பொறுத்து அவர் சிவராஜ் என்பவருக்கு ம.சா.ஆ.2 10.10.2018 ம்

தேதியிட்ட உயில்சாசனத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளதாகவும், மேற்படி சிவராஜ், மனுதாரர் / வாதிக்கு ஆதரவாக ம.சா.ஆ.1 07.09.2020ம் தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதிக் கொடுத்துள்ளதாகவும் தெரிய வரும் நிலையில் தாவா சொத்தானது செட்டில்மெண்ட் ஆவணத்தின் படி மனுதாரர் / வாதிக்கு பாத்தியப்பட்டு அவரது சுவாதீன அனுபவத்தில் உள்ளது என்பது மனுதாரர் / வாதியால் நிரூபிக்கப்பட்டுள்ள நிலையிலும், தாவா சொத்தின் சுவாதீன அனுபவம் எதிர்மனுதாரர் / பிரதிவாதியின் வசம் உள்ளது என்பதை நிரூபிக்கும் வகையில் எதிர்மனுதாரர் / பிரதிவாதிய எந்தவொரு ஆவணத்தையும் தாக்கல் செய்யாத நிலையில் மனுதாரர் / வாதிக்கு ஆதரவாக முதல் தோன்றல் வழக்கும், சட்டசமன் நோக்கும் எழுந்துள்ளதாக தெரிய வருகிறது. எனவே தாவா சொத்தினைப் பொறுத்து மனுதாரர் / வாதி கோரியுள்ள இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரம் மனுதாரர் / வாதிக்கு கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் முடிவிற்கு வருகிறது.

16) முடிவாக, இம்மனுவானது செலவுத்தொகையின்றி அனுமதிக்கப்பட்டு, தாவா சொத்தின் மீதான மனுதாரர் / வாதியின் அமைதியான சுவாதீன அனுபவத்திற்கு எதிர்மனுதாரர் / பிரதிவாதியோ, அவரது உறவினர்களோ, உள்ளீட்டாளர்களோ எவ்வித இடைஞ்சலும் செய்யக்கூடாது என்று அசல் வழக்கு முடியும் வரை இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் வரிவடிவில் எடுக்கப்பட்டு, பின்னர் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2022ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒப்பம்/–(G.ஆனந்தி)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

**<u>மனுதாரர் / வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சான்றவாணங்கள் பட்டியல்:</u>**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 07.09.2020 | மனுதாரர் / வாதியின் பெயரிலுள்ள செட்டில்மெண்ட் ஆவணத்தின் சான்றிட்ட சார்பதிவு நகல் |
| ம.சா.ஆ.2 | 10.10.2018 | உயில்சாசனத்தின் சான்றிட்ட சார்பதிவு நகல் |
| ம.சா.ஆ.3 | 05.07.2020 | நாச்சம்மாள் என்பவரின் இறப்பு சான்றின் அசல் |
| ம.சா.ஆ.4 | 16.05.1997 | நாச்சம்மாள் என்பவரின் பெயரிலுள்ள சிட்டா |
| ம.சா.ஆ.5 | 27.09.2021 | சிவராஜ் என்பவரின் பெயரிலுள்ள கணினி வழி சிட்டா |
| ம.சா.ஆ.6 | 26.02.2021 | மனுதாரர் / வாதியின் பெயரில் பட்டா மாற்றம் செய்வதற்காக வருவாய் துறையில் தாக்கல் செய்துள்ள விண்ணப்பத்தின் நகல் |
| ம.சா.ஆ.7 | 21.04.1997 | க.ச.எண்.6/1D உட்பிரிவு செய்யப்பட்டதற்கான உத்தரவு நகல் |

**<u>எதிர்மனுதாரர் / பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள் பட்டியல்:</u>**

| | | |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | 07.06.1978 | ராமசாமி கவுண்டரின் பெயரிலுள்ள கிரைய பத்திரத்தின் சான்றிட்ட சார்பதிவு நகல் |
| எ.ம.சா.ஆ.2 | 12.08.2020 | வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் |
| எ.ம.சா.ஆ.3 | 28.09.2021 | எதிர்மனுதாரர் / பிரதிவாதி, மனுதாரர் / வாதிக்கும், அவரது கணவருக்கும் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் |
| எ.ம.சா.ஆ.4 | 11.12.2021 | மேற்படி அறிவிப்பிற்கு மனுதாரர் / வாதியும், அவரது கணவரும் அனுப்பிய பதில் அறிவிப்பு |
| எ.ம.சா.ஆ.5 | – | நாச்சம்மாள் பெயரில் உள்ள டிஸ்சார்ஜ் சம்மரி |
| எ.ம.சா.ஆ.6 | 08.01.2022 | மயிலாத்தாள் என்பவரால் கோவை மூன்றாவது மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அ.வ.எண்.22/2022 ல் வாதி வகையறாவிற்கு அனுப்பப்பட்ட தனிநபர் அறிவிப்பு |

ஒப்பம்/–(G.ஆனந்தி)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

---

**அசல் / வரைவு ஆணையுரை**

அ.வ.எண்.263/2021 இல் இ.ம.எண்.02/2021

நாள் : 23.09.2022

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

பொள்ளாச்சி.

---